# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தம்)

(218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

---

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால் 2026 செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2026 ஓகத்து மாதம் 24 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[80 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 29.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2*** **:** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின் 54அ என்னும் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பின்வரும் செயல்கள் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழான தவறுகளாக இருக்க வேண்டுமென ஏற்பாடுசெய்வதுமாகும்:–

(அ) மெத்தம்பெட்டமைன் என்பதனை உற்பத்தி செய்தல்; அத்துடன்

(ஆ) ஹெரோயின், கொகேய்ன், மோர்பின், அபின் மற்றும் மெத்தம்பெட்டமைன் தவிர, முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றாம் அட்டணையின் பாகம் I இல் அ, ஆ, இ, ஈ மற்றும் உ என்னும் தொகுதிகளில் தரப்பட்டுள்ள ஏதேனும் அபாயகரமான அவுடதத்தை உற்பத்தி செய்தல்.

***வாசகம் 3*** **:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 54அஅ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஆழ்கடலின்மீது மெத்தம் பெட்டமைன் என்பதனை உற்பத்திசெய்வது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழான தவறொன்றாக இருப்பதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

***வாசகம் 4*** **:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது குறித்தசில சூழ்நிலைகளின்கீழ் தவறுகள் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்படுதல் தொடர்பான ஏற்பாடுகளைத் திருத்துவதாகும்.

***வாசகம் 5*** **:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அவ்வட்டவணையின் சட்டப்பயனானது –

(அ) கனாபிஸ் சற்றிவா L மற்றும் கனாபிஸ் சற்றிவா L இனது ஏதேனும் கலெனிகல் தயாரிப்பு என்பவற்றை அவ்வட்டவணையின் பாகம் I இன் குழு ஆ இன்கீழ் அபாயகரமான அவுடதங்களாகக் குறித்துரைப்பதாகும்; அத்துடன்

(ஆ) 2026 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தத் துக்கான விளைவாந்தன்மையாகவுள்ள அவ்வட்டவணையின் பாகம் III இற்கு விளை வாந்தன்மையினவான திருத்தங்களைச் செய்வதாகும்.

## நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தம்)

ச.வ.-ஓ 11/2026

## (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

218 ஆம் அத்தியாயத்தின் 54அ என்னும் பிரிவைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 54அ, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது: -

(1) அவ்வுட்பிரிவின் (அ) எனும் பந்தியில், “எரோயின் அல்லது கொக்கேய்ன் அல்லது மோபின் அல்லது அபின்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஹெரோயின், கொகேய்ன், மோர்பின், அபின் அல்லது மெத்தம்பெட்டமைன்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்து வதன் மூலமும்:-

“(அஅ) ஹெரோயின், கொகேய்ன், மோர்பின், அபின் மற்றும் மெத்தம் பெட்டமைன் தவிர, மூன்றாம் அட்டவணையின் பாகம் I இல் அ, ஆ, இ, ஈ மற்றும் உ என்னும்

PL 15931 - 172 (2026/09)

தொகுதிகளில் தரப்பட்டுள்ள ஏதேனும் அபாயகரமான அவுடத்தை உற்பத்திசெய்கின்ற எவரேனுமாள், இக்கட்டளைச் சட்டத்துக்கு எதிரான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அவர் யூரர் சபையொன்றில்லாது, மேல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது பத்தாண்டுகளுக்குக் குறையாததும் இருபதாண்டுகளை விஞ்சாததுமான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 54அஅ என்னும் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 54அஅ, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "எரோயின், கொக்கேய்ன், மோபின் அல்லது அபின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஹெரோயின், கொகேய்ன், மோர்பின், அபின் அல்லது மெத்தம்பெட்டமைன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) பிரிவுகள் 84 மற்றும் 85 இன் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், 54அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான, 54அஅ என்னும் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்கீழான மற்றும் 54ஆ

என்னும் பிரிவின்கீழான தவறொன்றுக்கு சந்தேகிக் கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆளொருவர் –

(அ) பிரிவு 77அ என்பதன்கீழ் அரசாங்கப் பகுப்பாய்வாளரால் வழங்கப்படும் அறிக்கை யின் நியதிகளின்படி, கடத்தப்பட்ட, இறக்குமதி செய்யப்பட்ட, ஏற்றுமதி செய் யப்பட்ட அல்லது உடைமையிலுள்ள அபாயகரமான அவுடதத்தின் தூய அளவு நூறு கிராம்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்டதாகக் காணப்படுகின்ற போது அல்லது, அத்தகைய அறிக்கை இல்லா மையில், கடத்தப்பட்ட, இறக்குமதி செய்யப்பட்ட, ஏற்றுமதி செய்யப்பட்ட அல்லது உடைமையிலுள்ள அத்தகைய அபாயகரமான அவுடதத்தின் மொத்த அளவு நூறு கிராம்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்டதாகக் காணப்படுகின்றபோது; அத்துடன்

(ஆ) மரண தண்டனை அல்லது ஆயுட்கால மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற் பாலதாகவுள்ளபோது,

விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேன்முறையீட்டு நீதி மன்றத்தினாற்றவிர பிணையில் விடப்படுதலாகாது:

ஆயின் எவ்வாறாயினும், மேன்முறையீட்டு நீதிமன்றம், இப்பிரிவின்கீழ் நீதிநெறிக்கவனத்துக்கு எடுத்து நியாயாதிக்கத்தைப் பொறுப்பேற்கின்ற விடத்து, அத்தகைய நீதிமன்றம், அதனது தற்றுணி பைப் பிரயோகிக்கையில், கருமமானது இயைபான மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்படுதல் வேண்டுமென பணித்தாலொழிய, அபாயகரமான அவுடதத்தின் தூய அளவு நூறு கிராம்களுக்குக் குறைவாகவுள்ளதென 77அ என்னும் பிரிவின்கீழ் அரசாங்கப் பகுப்பாய்வாளரினால்

வழங்கப்பட்ட அறிக்கை அடுத்துப்பின்னராக வெளிப் படுத்துகின்றமை எது எவ்வாறிருப்பினும், அத்தகைய கருமம் தொடர்பில் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்ப தற்கு அத்தகைய மேன்முறையீட்டு நீதிமன்றம் தொடருதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான மூன்றாம் அட்டவணை யைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் பாகம் I இன் குழு ஆ இன் 1 ஆம் பிரிவில், 26 ஆவது விடயத்தை உடனடுத்து பின்வரும் விடயங்களை உட்புகுத்துவதன் மூலமும்:

| | | |
|---|---|---|
| “26அ | கனாபிஸ் | கனாபிஸ் சற்றிவா L |
| 26ஆ | கனாபிஸ் | கனாபிஸ் சற்றிவா L இனது ஏதேனும் கலெனிகல்.” ; தயாரிப்பு; அத்துடன் |

(2) அவ்வட்டவணை பாகம் III இல் –

(அ) “(பிரிவு 54அ)” என்னும் சொற்களுக்கும் எண் களுக்கும் பதிலாக, “(பிரிவுகள் 54அ மற்றும் 54அஅ)” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அட்டவணையிலுள்ள பட்டியலில், “கனபிஸ்” என்னும் உப தலையங்கத்திற்குப் பதிலாக, “கனாபிஸ் / கனாபிஸ் சற்றிவா L / கனாபிஸ் சற்றிவா L இனது ஏதேனும் கலெனிகல் தயாரிப்பு” என்னும் உப தலையங்கத்தை இடுவதன்மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**6.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.